**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 40 /2022 |
| Deposition of witness | | PW- 2 /LW- 2 |
| Name | | திரு. ரிலாவூதின் |
| Father’s/Husband Name | | திரு. முகமதுசேக் |
| Village | | முத்துப்பேட்டை |
| Taluk | | முத்துப்பேட்டை |
| Age | | 42/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 9th day of September 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் 914 தமிழ்செல்வன் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் முத்துப்பேட்டையில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் அதிராம்பட்டிணம் சுப்பிரமணிய கோவில் தெருவில் சொந்தமாக பாரி மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 மஸ்தான்கனி என்னுடைய கடையில் வேலை பார்த்து வந்தார். இந்த வழக்கின் எதிரிகளான திருப்பதி , ஹரிகரன், விக்கி ஆகிய மூவரையும் தெரியும். என்னுடைய மளிகை கடையில் பொருட்கள் வாங்குவார்கள் அந்த வகையில் பழக்கம். சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை.

2019-ம் அன்று இரவு 7 to 8 மணியளவில் அ.சா.1 மஸ்தான்கனிக்கும் அஜர் எதிரிக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டு பின்பு சமாதானம் ஆகிசென்றுவிட்டார்கள். மற்ற விபரங்கள் எதுவும் தெரியாது. அசா 1 னு எதிரிகள் மீது புகார் மனு கொடுத்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. பட்டியல் சாட்சி 3 ஜாவித்அகமது என்னுடைய கடையில் வேலைபார்த்து

தற்போது வெளிநாடு சென்றுவிட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 30.08.2019 ந் தேதியில் இரவு சுமார் 8.45 மணியளவில் அ.சா.1 மஸ்தான்கனி கடையில் வேலை பார்த்துகொண்டிருந்தபோது எதிரிகள் திருப்பதி, ஹரிஹரன், விக்கி ஆகிய மூவரும் குடிபோதையில் வந்து கொசுவர்த்தி சுருள் கேட்டார்கள் என்றும் அ.சா.1 மஸ்தான்கனி கொஞ்சம் பொறுங்க நான் கஸ்டமருக்கு பொட்டலம் போட்டுவிட்டு தருகிறேன் என்று சொன்னதற்கு எதிரிகள் திருப்பதியும், ஹரிஹரனும் அ.சா.1 மஸ்தான்கனியை பார்த்து பொருள் தரபோறியா இல்லையா என மிரட்டினார்கள் என்றும் அ.சா.1 மஸ்தான்கனி கொஞ்சம் வெயிட் பண்ணுங்க என்று சொன்னபோது எதிரி ஹரிஹரன் அருகில் இருந்த பஞ்சிங் மிஷினை எடுத்து தேவடியா, குச்சிகாரி மகனே என்று அசிங்கமாக பேசி பொருள் கேட்டா தரமாட்டியா என்று எடைகல்லை தூக்கி அ.சா.1 ன் முகத்தில் எரிந்தார் என்றும் அது அவர் மூக்கில் மீது பட்டு இரத்தம் வந்தது என்றும் எதிரிகள் திருப்பதியும் விக்கியும் கடைக்குள் வந்து சராமாறியாக அ.சா.1 மஸ்தான்கனியை கையால் அடித்தார்கள் என்றும் மேலும் எதிரி ஹரிஹரன் கடையில் இருந்த எடைக்கல்லை அவரது வலது தோள்பட்டையில் அடித்தார் என்றும் பின்பு எதிரிகள் மூவரும் அ.சா.1 மஸ்தான்கனியை கடையிலிருந்து வெளியே இழுத்து ரோட்டில் வைத்து அடித்ததில் அங்கு நின்றுகொண்டிருந்த பைக்கில் மீது மோதிகீழே விழுந்துவிட்டேன் என்றும் மேலும் அதனால் அ.சா.1 மஸ்தான்கனியின் தலை மற்றும் பின்புறபுரடி காயம் ஏற்பட்டது என்றும் மேலும் எதிரி விக்கி புல்லட்டில் வைத்திருந்த இரும்பு ராடால் அ.சா.1 ன் நெற்றியில் அடித்தனர் என்றும் தலையில் அடிக்க வந்த

போது அருகில் இருந்த நாங்கள்போய் தடுத்ததால் அந்த அடி அ.சா.1 மஸ்தான்கனின் மீது விழவில்லை.

மேலும் எதிரிகள் மூவரும் அ.சா.1 மஸ்தான்கனியை பார்த்து நீ இன்னைக்கு தப்பித்துகிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்றும் உன்னை கடையோடு வைத்து கொழுத்துவோம் என்று இல்லாவிடில் உன் வீடு எங்களுக்கு தெரியும் உன்னை வீட்டோடு வைத்து கொளுத்துவோம் என்று கொலைமிரட்டல்விடுத்து சென்றனர் என்றும் காயம் பட்ட அ.சா.1 மஸ்தான்கனியை நான் அவரது மாமா நிஜாமுதின் இருவருவம் அதிராம்பட்டிணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் அங்கு விசாரணைக்கு வந்த அதிராம்பட்டிண போலிசாரிடம் அ.சா.1 மஸ்தான்கனி புகார் மனு கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரி தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/– திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை